


இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 282 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 09 – செவ்வாய்க்கிழமை 23 மே 2023 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 282 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 09 - Tuesday 23 May 2023 - Madurai 8 Pages ₹ 5.00


## நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி!

# கலைஞரின் பணிகளை நினைவுகூரவே, நூற்றாண்டு விழா!

## அரசின் சார்பில் விழா கொண்டாடுவது குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, மே 23 -**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடுவது குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் போது, "நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி கலைஞரின் பணிகளை நினைவுகூரவே நூற்றாண்டு விழா" என்று கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.5.2023) தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாக கொண்டாடுவது குறித்து நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-

தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவைச் சிறப்போடும் எழுச்சியுடனும் கொண்டாடுவது குறித்த பல்வேறு ஆலோசனைகளை வழங்கிய அனைவர்க்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக அமர்ந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, 13 முறையும் வெற்றி பெற்றவர் தலைவர் கலைஞர் அவர்கள். தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் அமர்ந்து அரிய வாதங்களை எடுத்து வைத்தவர். இந்திய நாட்டின் குடியரசுத் தலைவர்களை துணைக் குடியரசுத் தலைவர்களை பல முறை தேர்ந்தெடுத்து அவர்களை அந்தப் பொறுப்புகளில் அமர்த்தியவர்.

### பிரதமர்களை உருவாக்கியவர்!

இந்தியாவின் பிரதமர்களை பல்வேறு முறை உருவாக்கியவர். தமிழ்நாட்டின் அரசியல் தலைவராக மட்டுமல்ல இந்திய அரசியலின் திசையைத் தீர்மானிப்பவராகவும் இருந்தார்.

முதல் முறை ஆட்சிக்கு வந்த போது முதலமைச்சர் கலைஞர் அவர்கள், "நான் முதலமைச்சராக கோட்டையில் இருந்தாலும், அங்கிருந்தபடியே குடிசைகளைப் பற்றியே சிந்திப்பவன்" என்றார்.

தன்னுடைய ஆட்சிக்கு மூன்று இலக்கணம் இருப்பதாக கலைஞர் அவர்கள் சொன்னார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (22.5.2023) தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாக கொண்டாடுவது குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு மற்றும் அரசு துறைச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

1. சமுதாய சீர்திருத்தத் தொண்டு
2. வளர்ச்சிப் பணிகள்
3. சமதர்ம நோக்கு

இவை மூன்றும்தான் அவருடைய ஆட்சியின் இலக்கணமாக அமைந்திருந்தது.

### நவீன தமிழ்நாட்டை உருவாக்கியவர்!

அந்த இலக்கணத்தின் அடிப்படையில் தான் ஆட்சி செலுத்தினார். அதனால் அனைத்து துறைகளும் ஒருசேர வளர்ந்தது!

★ அன்னைத் தமிழ்மொழிக்குச் செம்மொழித் தகுதி!
★ ஒன்றிய அரசில் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீட்டு உரிமை!
★ அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் சட்டம்!
★ மகளிருக்கு சொத்தில் சம உரிமை என்ற சட்டம்!
★ பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலின மக்களுக்கான சமூகநீதி உரிமைகள்!
★ உழவர்களுக்கு இலவச மின்சாரம்!
★ கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்பட்ட 7 ஆயிரம் கோடிக் கடன் ரத்து!
★ சென்னை தரமணியில் டைட்டல் பார்க் !
★ சென்னைக்கு மெட்ரோ ரயில் திட்டம்!
★ சிப்காட், சிட்கோ, தொழில் வளாகங்கள் உருவாக்கம்!
★ தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உருவாக்கியது!
★ நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டங்கள்!
★ அவசர ஆம்புலன்ஸ் 108 சேவை அறிமுகம்!
★ இலவச மருத்துவக் காப்பீடுத் திட்டம்!
★ மினி பஸ்களை கொண்டு வந்தது!
★ உழவர் சந்தைகளை அமைத்தது!
★ ஏழைப் பெண்களுக்கு திருமண உதவி, கைம்பெண் மறுமண நிதி உதவி, கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவி ஆகிய திட்டங்கள்!
★ பல்லாயிரம் கோவில்களுக்கு திருப்பணிகள்!
★ அரசு வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இடஒதுக்கீடு!
★ உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்காக 33 விழுக்காடு இடஒதுக்கீடு!
★ இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்புகள் வழங்கியது!
★ மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைத்தது !
★ அனைவரும் இணைந்து வாழ சமத்துவபுரங்கள் உருவாக்கியது!
★ இஸ்லாமிய சமூகத்தினருக்கு 3.5 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கியது!
★ உருது பேசும் இஸ்லாமியர்களை பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் இணைத்தது!
★ நுழைவுத் தேர்வு ரத்து!
★ மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கியது!
★ சேலம் உருக்காலை, சேலம் புதிய ரயில்வே மண்டலம், நெம்மேலி கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம், இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஆசியாவிலேயே பெரிய அண்ணா நூலகம் ஆகியவை உருவாக்கம்!
★ மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் ஆகியோருக்கு மறுவாழ்வு வழங்கியது!
★ ஏராளமான பல்கலைக்கழகங்கள், மருத்துவக் கல்லூரிகள், கலை அறிவியல் கல்லூரிகள் உருவாக்கியது!

இப்படி நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பிதான் 'தமிழினத் தலைவர்' கலைஞர்!

அப்படிப்பட்ட தலைவருக்குத்தான் அரசு சார்பில் நூற்றாண்டு விழா கொண்டாடுவதற்கான ஆலோசனையில் நாம் ஈடுபட்டிருக்கிறோம்.

### மாதந்தோறும் விழாக்கள்!

'தமிழினத் தலைவர்' கலைஞரைப் பெருமைப்படுத்தும் விழாக்களாக மட்டுமல்ல, தமிழ்நாட்டுக்கு அவர் நிறைவேற்றிக் காட்டிய திட்டங்களை மக்களுக்கு நினைவூட்டுபவையாக இந்த விழாக்கள் அமைய வேண்டும்.

மாதம் தோறும் ஒவ்வொரு பொருளின் அடிப்படையில் இந்த விழாக்களை நடத்தலாம்.

பெரிய பெரிய விழாக்களாக மட்டுமல்லாமல், அனைத்துத் தரப்பினரும் பங்கெடுக்கும் விழாக்களாக இவற்றை நடத்த வேண்டும். இன்றைய நவீன ஊடகங்கள் அனைத்தையும் இதற்கு பயன்படுத்த வேண்டும். செய்தி மக்கள் தொடர்புத் துறை இதில் முக்கியப் பங்காற்ற வேண்டும்.

அரசு நடத்துவதாக மட்டுமல்லாமல் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், மாணவர்கள், பெண்கள், அரசு ஊழியர்கள், பயனடைந்த மக்கள் ஆகியோர் இணைந்து கொண்டாடுவதாக அது அமைய வேண்டும். அமைச்சர்கள் கொடுத்த ஆலோசனைகள் அனைத்தையும் வரிசைப்படுத்தி, தொகுத்து பின்னர் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும்.

### அமைச்சர்களை உள்ளடக்கிய குழுக்கள்!

நூற்றாண்டு விழா தலைமைக் குழு, விழாக் குழு, மலர்க்குழு, கண்காட்சிக்குழு போன்ற குழுக்கள் அமைச்சர்களை உள்ளடக்கி அமைக்கப்படும்.

இந்தக் குழுக்கள் தங்களுக்குள் அடிக்கடி கூடிப் பேசி நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும். இந்த கூட்டம் என்பது தொடக்கக் கூட்டம் தான். தொடர்ந்து நாம் பேசுவோம். இது குறித்த விரிவான அரசாணை விரைவில் வெளியிடப்படும்.

அதற்கேற்ற வகையில் நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுவோம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## தொழில் முதலீடுகளை ஈர்க்க

# முதல்வர் மு.க.ஸ்டாலின் சிங்கப்பூர் பயணம்!

சென்னை, மே 23–

தொழில் முதலீடுகளை ஈர்க்கும் முயற்சியாக சிங்கப்பூர் செல்லும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நாளை (24.5.2023) நடைபெறும் வர்த்தக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்கிறார்.

தமிழகத்தை 2030ம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்த்தும் இலக்கை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிர்ணயித்துள்ளார். அதை அடையும் நோக்கில், உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க தமிழக தொழில் துறை பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக, 2024 ஜனவரியில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு சென்னையில் நடக்க உள்ளது. இதில் பங்கேற்குமாறு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு வருகிறது.

இதையொட்டி, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு, அங்குள்ள முதலீட்டாளர்கள், வர்த்தக அமைப்பினர், அதிகாரிகளை சந்திக்க உள்ளார். இதன் முதல்கட்டமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூர் செல்கிறார்.

முன்னதாக, புதிதாக நியமிக்கப்பட்ட தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதல்வரின் பயண ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக சிங்கப்பூர் புறப்பட்டுச் சென்றுள்ள நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூர் செல்கிறார்.

---

# பிரதமர் மோடி புதிய நாடாளுமன்ற கட்டிடத்தைத் திறப்பதா?

## மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் கண்டனம்!

புதுடெல்லி, மே 23 -

தற்போதைய நாடாளுமன்றக் கட்டிடம் 96 ஆண்டுகள் பழமையானது. எனவே, அதற்கு பதிலாக புதிய நாடாளுமன்றம் கட்ட ஒன்றிய அரசு முடிவு செய்தது. கடந்த 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 10ந் தேதி, புதிய நாடாளுமன்ற கட்டிடம் கட்ட பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். மத்திய பொதுப்பணித்துறை மேற்பார்வையில், டாடா புராஜக்ட்ஸ் நிறுவனம், கட்டுமானப் பணியை மேற்கொண்டது.

சுமார் 2 ஆண்டுகளில் புதிய நாடாளுமன்ற கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பிரதமர் மோடி திறந்து வைக்கிறார். மக்களவையில் 888 உறுப்பினர்களும், மாநிலங்களவையில் 300 உறுப்பினர்களும் தாராளமாக அமரும் வகையில் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கூட்டு கூட்டம் நடக்கும்போது, மக்களவையில் 1,280 உறுப்பினர்கள்வரை அமரலாம். கட்டுமானப் பணி முடிந்த நிலையில், புதிய நாடாளுமன்ற கட்டிடம், வருகிற 28ந் தேதி திறக்கப்படுகிறது. அதை திறந்து வைக்குமாறு பிரதமர் மோடிக்கு மக்களவை சபாநாயகர் ஓம்பிர்லா அழைப்பு விடுத்தார். அதை ஏற்று, பிரதமர் மோடி திறந்து வைக்கிறார்.

திறப்பு விழா தேதியான மே 28ந் தேதி, சுதந்திர போராட்ட வீரர் சாவர்க்கரின் பிறந்தநாள் ஆகும். அந்த தேதியை தேர்ந்தெடுத்ததற்கும் எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன. "இது, தேசத்தின் முன்னோர்களுக்கு இழைக்கப்படும் அவமானம்" என்று காங்கிரஸ் கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார். புதிய நாடாளுமன்ற கட்டிடத்தை பிரதமர் திறப்பதற்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சி பொதுச்செயலாளர் டி.ராஜாவும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

அவர் கூறியிருப்பதாவது:

நாட்டின் நிர்வாக பிரிவின் தலைவராக பிரதமர் இருக்கிறார். நாடாளுமன்றமோ, சட்டம் இயற்றும் பிரிவாக உள்ளது. எனவே, நாட்டின் தலைவர் என்ற முறையில், ஜனாதிபதி திரவுபதி முர்மு அதை திறந்து வைப்பதுதான் உகந்ததாக இருக்கும். மோடியை பொறுத்தவரை, சுய கவுரவம், கேமரா ஆகியவற்றின் மீதான ஆர்வத்தால், நாகரிகத்தையும், விதிமுறைகளையும் புறம் தள்ளுகிறார் என்று அவர் கூறியுள்ளார்.

ராஷ்டிரீய ஜனதாதள மூத்த தலைவர் மனோஜ்குமார் ஜா, "புதிய நாடாளுமன்ற கட்டிடத்தை ஜனாதிபதி திறக்கக்கூடாதா?" என்று கேட்டுள்ளார். அகில இந்திய மஜ்லிஸ் கட்சி தலைவர் அசாதுதின் ஒவைசி எம்.பி. தனது 'டுவிட்டர்' பக்கத்தில் கூறியிருப்பதாவது: புதிய கட்டிடத்தை பிரதமர் ஏன் திறக்க வேண்டும்? அவர் நிர்வாக அமைப்பின் தலைவர். சட்டம் இயற்றும் அமைப்பின் தலைவர் அல்ல. மக்களவை சபாநாயகரோ, மாநிலங்களவை தலைவரோ கூட திறந்து வைக்கலாம். அது மக்கள் பணத்தால் கட்டப்பட்டது. பிரதமர் ஏன் தன்னுடைய நண்பர்களின் சொந்த பணத்தால் கட்டப்பட்டதுபோல் நடந்து கொள்கிறார்? என்று அவர் கூறியுள்ளார். காங்கிரஸ் மூத்த தலைவர் ஆனந்த் சர்மாவும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.